நாள்: 09.07.2014

**இன்றைய வேளாண் செய்திகள்**

தினமலர்

## பி.ஆர்.ஓ., இல்லாத வேளாண் இயக்குனரகம்: அலைக்கழிப்பிற்குள்ளாகும் விவசாயிகள்

வேளாண்துறை இயக்குனரத்திற்கு, மக்கள் தொடர்பு அதிகாரி (பி.ஆர்.ஓ.,) நியமிக்கப்படாததால், அதிகாரிகளை சந்திக்க வரும் விவசாயிகள், பொதுமக்கள், மிகுந்த அலைக்கழிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.சேப்பாக்கத்தில்...சென்னை, சேப்பாக்கத்தில், வேளாண்துறை இயக்குனரகம் உள்ளது. இங்கு, வேளாண்மை, தோட்டக்கலை, தோட்டக்கலை வளர்ச்சி முகமை, தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், தென்னை விவசாயிகள் நல வாரியம் உள்ளிட்ட, பல பிரிவு அலுவலகங்கள் செயல்படுகின்றன.

ஒவ்வொரு பிரிவிற்கும், ஆணையர், கூடுதல் மற்றும் துணை இயக்குனர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளனர். அரசால், விவசாயிகளுக்காக, அறிவிக்கப்படும் சிறப்பு திட்டங்கள், மாவட்ட வாரியாக இயங்கும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் அலுவலங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.மாவட்ட அலுவலகங்களில் அரசின் சலுகைகளை பெற முடியாத விவசாயிகள், உயர் அதிகாரிகளை சந்தித்து முறையிட, இயக்குனரத்திற்கு வந்து செல்கின்றனர். விதை நெல், உரம், நடவு மற்றும் அறுவடை இயந்திரங்கள் தட்டுப்பாடு குறித்து புகார் செய்யவும், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும், குழுவாக வருகின்றனர்.

இப்படி வருபவர்கள், அதிகாரிகளை சந்திக்க முடியாமல்,
அலைக்கழிப்பிற்குள்ளாகி வருகின்றனர். வேளாண்மை துறை இயக்குனரத்திற்கு, பி.ஆர்.ஓ., நியமிக்கப்படாததே இதற்கு முக்கிய காரணம். இதனால், அதிகாரிகள்

அலுவலகத்தில் இருக்கின்றனரா என்பதை கூட, விவசாயிகளால் உறுதி செய்து கொள்ள முடிவதில்லை.

வெளிமாவட்டங்களில் இருந்து பஸ், ரயில் மூலம் வரும் விவசாயிகள், அதிகாரிகளை சந்திக்க முடியாமல், விரக்தியுடன் ஊர் திரும்புகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில்...கடந்த, 2008 முன், இத்துறைக்கென, தனியாக, பி.ஆர்.ஓ., இருந்தார். கடைசியாக பணியில் இருந்த அதிகாரி, ஓய்வுப் பெற்ற பிறகு, புதிய அதிகாரியை நியமிப்பதை, அரசு தவிர்த்து வருகிறது.இதுகுறித்து, தஞ்சாவூர் மாவட்ட விவசாயி ஒருவர் கூறுகையில், 'டெல்டா மாவட்டங்களில், அரசின் குறுவை சாகுபடி சிறப்பு திட்ட இலவச பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், என்னை, பயனாளியாக, மாவட்ட வேளாண் அதிகாரிகள் சேர்க்கவில்லை. இதுகுறித்து முறையிட, வேளாண் ஆணையரை சந்திக்க வந்தேன். அவர், முக்கிய அலுவலாக இருப்பதால், சந்திக்க முடியாது என்று கூறிவிட்டனர். மூன்று நாட்களாக, சென்னை ஓட்டலில் அறை எடுத்து தங்கியும், அவரை சந்திக்க முடியவில்லை' என்றார்.

- -நமது நிருபர் --

## <u>ரேஷன் கடைகளில் வெங்காயம், உருளைக்கிழங்கு விற்பனை</u>

**ஜெய்ப்பூர்**:அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை அடுத்து, உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றை, ரேஷன் கடைகள் மூலமாக, குறைந்த விலைக்கு

விற்பனை செய்ய, ராஜஸ்தான் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.ராஜஸ்தான் மாநிலத்தில் பதுக்கல்காரர்களின் கைவரிசையால், அத்தியாவசிய பொருட்களின் விலை எகிறியுள்ளது.இதையடுத்து, அந்த மாநில முதல்வரும், பா.ஜ., மூத்த தலைவருமான வசுந்தரா ராஜே சிந்தியா, விலை உயர்வை கட்டுப்படுத்துவது குறித்தும், பதுக்கல்காரர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பது குறித்தும், உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

இதற்காக, நான்கு பேர் அடங்கிய குழுவையும், அவர் அமைத்துள்ளார். இந்த குழு, சந்தை நிலவரத்தை ஆய்வு செய்து, முதல்வரிடம் அறிக்கை அளிக்கும்.இதுதவிர,

மக்கள் அதிகமாக பயன்படுத்தும் உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றை, பொதுமக்களுக்கு, குறைந்த விலையில் வழங்கும் வகையில், ரேஷன் கடைகள் மூலமாக, அவற்றை விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளார். இதுகுறித்து, மாநில உணவுப் பொருள் வினியோக அதிகாரிகளிடம் அறிக்கை அளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

**பருவமழை பொய்த்ததுநெற்பயிர் பரப்பு குறைந்தது**



**புதுடில்லி**:போதுமான மழையின்மையால், நடப்பாண்டு கரீப் பருவத்தில் (ஜூன் – செப்.,) இதுவரையிலுமாக, நெல் பயிரிடும் பரப்பு, 25 சதவீதம் குறைந்து, 45.12 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.

இது, கடந்தாண்டின் இதே பருவத்தில், 60.28 லட்சம் ஹெக்டேராக இருந்-தது.பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பும் (ஜூலை 4ம் தேதி நிலவரம்), 66 சத-வீதம் வீழ்ச்சி கண்டு, 21.84 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 7.5 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு, 77 சதவீதம் குறைந்து, 14.49 லட்சம் ஹெக்டேராகவும், முக்கிய உணவு தானியங்களின் பயிரிடும் பரப்பு, 58 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 27.93 லட்சம் ஹெக்டேராகவும் சரிவடைந்துள்-ளது.கரும்பு பயிரிடும் பரப்பு, 45.20 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 43.92 லட்சம்

ஹெக்டேராக குறைந்துள்ளது. பருத்தி பயிரிடும் பரப்பளவு, 55.77 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 35.42 லட்சம் ஹெக்டேராக வீழ்ச்சி கண்டுள்ளது. தற்போதைய புள்ளிவிவரத்தின்படி, கரீப் பருவத்தில், வேளாண் சாகுபடி பரப்பு, 182.40 லட்சம் ஹெக்டேரை தாண்டியுள்ளது என, அரசின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இது, இதற்கு முந்தைய பருவத்தில், 318.90 லட்சம் ஹெக்டேராக மிகவும் அதிகரித்து காணப்பட்டது.சென்ற 2013–14ம் பயிர் பருவத்தில் (ஜூலை – ஜூன்), பருவமழை நன்கு இருந்ததையடுத்து, நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி, 26.44 கோடி டன்னை எட்டி சாதனை படைத்தது. நாடு முழுவதிலும், சென்ற ஜூன் மாதத்தில் பெய்த மழையளவு, சராசரிக்கும் குறைவாக, 43 சதவீதம் என்ற அளவில் இருந்தது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**வத்திப்பட்டி எனும் "பப்பாளி கிராமம்'**



**திண்டுக்கல்**, மாவட்டம் நத்தம் அருகே வத்திப்பட்டி கிராம விவசாயிகள் தங்களது தொழில் திறமையை விவசாயத்தில் புகுத்தி சாதனை படைத்து வருகின்றனர். இவர்கள் இயற்கை உரத்தை பெருமளவு பயன்படுத்துகின்றனர். இதனால், இங்கு விளைவிக்கப்படும் பயிர்கள் செழுமையாகவும்,

உயிர்ச்சத்துக்கள் நிறைந்ததாகவும் விளங்குவதாக வேளாண்

ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். தட்பவெட்ப நிலை, தண்ணீர்

பற்றாக்குறைக்கு ஏற்ப விளைவிக்கப்படும் பயிர்களை மாற்றியமைத்து லாபம் ஈட்டி வருகின்றனர்.

வத்திப்பட்டியை சேர்ந்தவர் விவசாயி சி. ஆண்டிச்சாமி,65. இவர், தமிழ்நாடு அரசு தலைமை செயலகத்தில் நிதிப்பிரிவு இணை செயலராக 34 ஆண்டுகள் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். தற்போது விவசாயத்தில் முழுமையாக ஈடுபட்டு வருகிறார். வத்திப்பட்டியை பப்பாளி கிராமமாக மாற்றிய பெரும்பங்கு இவருக்குண்டு.

அவர் கூறியதாவது:

தமிழகத்தில் சப்னா (மஞ்சள் நிறம்), ரெட் லேடி (சிவப்பு நிறம்), ரெட் ராயல் (சிவப்பு நிறம்), சிந்தா (மஞ்சள் நிறம்) என நான்கு வகையான ஒட்டுரக பப்பாளிகள் விளைவிக்கப்படுகிறது. இதன் விதை 100 கிராம் ரூ.3,500. 100 கிராம் எடைக்கு சுமார் 1000 விதைகள் இருக்கும். சப்னா, சிந்தா வகை பப்பாளிகள் எண்ணெய் நாடுகளான குவைத், துபாய் நாடுகளுக்கு பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பப்பாளி விவசாயத்தை குழந் தையை போன்று பராமரிக்க வேண் டும். இந்த விவசாயத்தில் முறையான வகையில் ஈடுபட்டால் ஏக்கருக்கு ரூ.3 லட்சம் வரை லாபம் கிடைக்கும்.

கிணற்றுப்பாசனம் மூலம் ஐந்து நாட்களுக்கு ஒரு முறை பப்பாளி வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுகிறோம். ஆண்டு தோறும் மாசியில் நடவு செய்ய வேண்டும். 45 நாட்களுக்கு பின் விளைச்சல் கிடைக் கும். 8 முதல் 14 மாதங்கள் வரை காய்கள் கிடைக்கும். இயற்கை உரம் பயன்படுத்தினால் நல்ல விளைச்சல் காணலாம். மார்க்கெட் மதிப்புக்கு ஏற்ப கிலோ ரூ.8 முதல் ரூ.9 வரை விற்கலாம். சிந்தா வகை பப்பாளியை கர்நாடக மாநில பழ வியாபாரிகள் அதிகளவு கொள்முதல்

செய்கின்றனர். நான், சகோதரர்கள் உட்பட சிலர் பப்பாளி விவசாயத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகிறோம், என்றார்.

தொடர்புக்கு சி.ஆண்டிச்சாமி, ஓய்வு பெற்ற தலைமை செயலக இணை செயலர், வத்திப்பட்டி கிராமம், நத்தம் வட்டாரம், திண்டுக்கல் மாவட்டம்.
-கா.சுப்பிரமணியன்,
மதுரை.

**நவீன தொழில்நுட்பம்**



சர்பகந்தா சாகுபடி : இந்த மூலிகை தாவரவியல் முறைப்படி ராவோல்பியா செர்பன்டைனா என்பதாகும். மிதமானது முதல் ஆழமான மண், வண்டல் மண், கருப்பு மண்ணில் அடர்த்தியாகவும், பெரியதாகவும் வளரும். இது 1500 முதல் 3500 மி.மீ வரை மழையளவும் 10-38 டிகிரி செல்சியஸ் வெப்பமும் உடைய பகுதிகளில் செழித்து வளரும். கடல் மட்டத்திலிருந்து 1300 முதல் 1400 மீட்டர் எம்.எஸ்.எல். உயரம் வரை நன்கு வளரக்கூடிய ஒரு நீண்ட கால பயிராகும். சர்பகந்தாவிலிருந்து 200க்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன.

இரண்டு அல்லது மூன்று முறை உழவு செய்து பண்படுத்தப்பட்ட நிலத்தில் எக்டருக்கு 10 டன் தொழுஉரமிட்டு உழுத நிலத்தில் 60 செ.மீ இடைவெளியில் பார்கள் அமைத்து அதன் பக்கவாட்டில் நாற்றுகளை 30 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். சர்பகந்தா இனப்பெருக்கத்திற்கு வேர்க்கரணைகள்,

தண்டுக்கரணைகள் அல்லது விதைகள் உபயோகிக்கப்படுகிறது. விதைகள் 10-74 சதம் வரை முளைக்கும் திறன் கொண்டது. செப்டம்பர் முதல் நவம்பர் வரை சேகரிக்கப்பட்ட விதைகள் நன்கு முளைக்கும். ஒரு எக்டர் விதைப்பதற்கு 5-6 கிலோ விதை தேவைப்படும். நாற்றங்கால்களை மேட்டுப்பாத்திகளாக, அமைத்து நன்கு மக்கிய தொழு உரத்தை 1 சதுர மீட்டருக்கு 1 கிலோ வீதம் இட்டு 6-7 செ.மீ. இடைவெளியில் விதைகளை விதைக்க வேண்டும். நாற்றங்கால் தயார் செய்ய மே-ஜூன் மாதம் சிறந்தது.

நட்ட இரண்டு மாதங்கள் ஆனபின் நாற்றுகளை நடவு வயலில் நட வேண்டும். நாற்றுகள் 4-6 இலைகள் கொண்டதாக இருக்கும்போது 30ஙீ60 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். வேர்க்கரணைகளால் 2.5-5 செ.மீ நீளமும், தண்டுக்கரணைகள் என்றால் 12-20 செ.மீ. நீளமும் இருத்தல் வேண்டும். வேர் உருவாவதை துரிதப்படுத்த செராடிக்ஸ் ஹார்மோனில் நனைத்து நடுதல் நல்லது. எக்டருக்கு 10-15 டன் தொழுஉரம் இட வேண்டும். எக்டருக்கு 60:30:30 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்களை ஆண்டுதோறும் 2 முதல் 3 முறை இடவேண்டும். இதில் தழைச்சத்தின் அளவில் 2 அல்லது 3 முறையாக பிரித்து 3 மாத இடைவெளியில் அளிப்பது நல்லது. நடவு செய்தவுடனும், பின்பு 3 நாட்களுக்கு ஒருமுறையும், நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின்னர் தேவைக்கேற்ப 5-7 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட வேண்டும். அனோமலா பொலைட்டா வேர்புழுக்கள், ஸ்பிஞ்சிட்டெய்லிபில்லா நீரி அந்துப்பூச்சி, கூண் வண்டுகள், புழுக்கள் தாக்குதல் இருந்தாலும் சேதம் அதிகம் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

நோய்களில் செர்கோஸ்போரா ராவெல்கபியே இலைப்புள்ளி நோய், செர்கோஸ்போரா சொபண்டினா இழைபுழு நோய், ஆல்டெர்நெரியா டினுயிஸ் இணபக் இலைக்கருகல்நோய், இலைத்துளை நோய் ஆந்தரக்னோஸ் போன்ற

நோய்களின் தாக்குதல் அதிகம் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த 0.2 சதம் "சிஏனப்' அல்லது "மான்கோசெப்' தெளிக்கலாம். மேலும் நச்சுயிரினால் உண்டாகும் தேமல் நோய், தலைக்கொத்து நோய் தென்பட்டால் உடனே செடியை வேரோடு அகற்றி எரித்து விட வேண்டும்.

அறுவடை : சர்பகந்தா விதைத்த 2முதல் 3 ஆண்டுகளில் அறுடைக்கு தயாராகிறது. நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இலைகள் உதிர்ந்தவுடன் வேர்ப்பகுதியில் அதிக மருந்து, இரசாயனப் பொருட்கள் இருக்கும். அப்போது அறுவடை செய்வது நல்லது. அறுவடையின்போது வேர்களை கருவிகளை கொண்டு ஆழமாகத் தோண்டி எடுக்க வேண்டும்.

தோண்டி எடுக்கப்பட்ட வேர்களை நன்கு கழுவி 1 முதல் 2 செ.மீ. நீளமுள்ள துண்டுகளாக வெட்டி 1-10 சதம் ஈரப்பதம் வரும் வரை உலர்த்தி பின்பு பாலிதீன் உறை கொண்ட சாக்குப்பைகளில் அடைத்து ஈரமற்ற பகுதியில் சேமித்து வைக்கலாம். ஒரு எக்டருக்கு 1.5 முதல் 2.5 டன் உலர்ந்த வேர்கள் கிடைக்கும். இதில் 40 முதல் 45 சதம் வேர்ப்பட்டையாக மகசூலைப் பெறலாம். வேர்ப்பட்டைகளிலிருந்து 30 சதம் இரசாயன மூலப்பொருட் களான ரிசர்பைன், அஜ்மலைன், சொபண்டைன் போன்றவைகள் பெறப்படுகின்றன. (தகவல் : முனைவர் ப.பாலசுப்பிரமணி, முனைவர் எம்.தமிழ்செல்வன், பி.பானுபிரியா, மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு. போன்: 04565 - 283 080).

- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**கரிசல்மண்ணில் முருங்கையா**



நமது தமிழகத்தின் சில கரிசல் மண்பகுதியில் செடிமுருங்கை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் முழுமையாக அதன் பலனைப் பெற அவசியம் நுண்ணீர்ப் பாசனம் மேற்கொள்ள வேண்டும். கரிசல் மண்ணிற்கு அதிக நீர்ப் பாய்ச்சுவது ஆபத்தாகும். இது மண்ணை சத்துக்களை பிடித்து வைத்துக் கொள்ள செய்வதுடன் உப்பு தன்மை அதிகமானால் செடியே மஞ்சள் நிறமாகி, அடி இலைகளைக் கடுமையாக பாதிக்கும்.

மண்ணில் உப்புநிலை அறிந்து நீரின் உப்புநிலை அறிந்து தான் பயிரைத் தேர்வு செய்ய வேண்டும். நல்ல வடிகால் வசதி ஏற்படுத்தி மேட்டுப்பாத்திகள் அமைத்து பயிர் செய்தால் உப்பு நீர்ப்பாதிப்பைக் குறைக்கலாம். களர் உள்ள பகுதிகளில் அதிகம் ஜிப்சம் இட்டு நீரை வடித்தால் நல்லது. தக்கைப்பூண்டு செடிகள் நன்கு வளர்ந்ததும் மடக்கி உழுதால் கண்டிப்பாக உப்பு மண் தன்மை மாறும். 3அல்லது 4 முறை இத்தகைய பசுந்தழை உர பயன்பாடு மூலம் கணிசமாக உப்பைக் குறைக்கலாம்.

மேலும் இத்தகைய பகுதிகளில் பல மரங்கள் சாகுபடி செய்தும் சேதத்தைத் தவிர்க்கலாம். குறிப்பாக உப்புத்தன்மை ஓரளவு உள்ள மண்ணில் அகத்திக்கீரை,

புளி மற்றும் சீதா ஓரளவு வளரும். கொடுக்காப்புளி, வெஸ்ட்இண்டிய செர்ரி மற்றும் இலவன் பஞ்சு முதலிய மரங்களை லாபகரமாக வளர்க்கலாம். தீவனப்புற்கள், கம்பு நேப்பியர் மற்றும் கொழுக்கட்டைப்புல் வகைகளை நல்ல மகசூல் தரத்தக்க அளவு மேட்டுப்பாத்தி உத்திகள் மற்றும் அதிக மண்புழு இடல் மூலம் பெறலாம். கிளைரிசிடியா, வேலி மசால், குதிரை மசால் முதலிய பயிர்களையும் நாம் நட்டு நல்ல பலன் பெறலாம். தேவைப்படும் இடங்களில் நல்ல மண், மணல், தொழு உரம், செம்மண் மண்புழு உரம், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா கலவைகளை குழிகளில் இட்டு மரக்கன்றுகள் வளர்த்து பலன் பெறலாம்.

இரசாயன உரங்களை தொழுஉரம் அல்லது மண்புழு உரத்துடன் 3 நாட்கள் நன்கு கலக்கி வைத்து பின்னர் அவற்றை செடிக்கு அருகில் பாக்கெட் உரமிடல் உத்தி மூலம் வைத்து பலன் பெறலாம். நிலச்சீர்த்திருத்தம் தேவைப்படும் விவசாயிகள் மண் நீர் ஆய்வு அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.
- டாக்டர் பா.இளங்கோவன்

உடுமலை,

திருப்பூர் மாவட்டம்.

## அரச்சலூரில் அதிகமாக மழையளவு பதிவு

**ஈரோடு**: அரச்சலூரில் அதிகபட்ச மழையளவு பதிவாகி உள்ளது. ஈரோடு மாவட்டத்தில், கடந்த சில தினங்களாகவே, ஆங்காங்கே லேசான மழை பெய்து வருகிறது. கடந்த, நான்கு நாட்களுக்கு முன், ஈரோட்டில் முன் எப்போதும் இல்லாத வகையில், ஒரே நாளில், 82 மி.மீ மழை கொட்டி தீர்த்தது.
அதன் பின் மழை பொழிவு இல்லை. இந்நிலையில், நேற்று முன்தினம் மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளிலும் லேசான மழை பெய்தது. இதில், அரச்சலூரில் அதிகபட்சமாக, 33 மி.மீ., மழையளவு பதிவாகி உள்ளது.

புங்கம்பாடியில்,12, சென்னிமØ ல,11, சிவகிரி,5, மொடக்குறிச்சி,5.9 மி.மீ., மழையளவு பதிவானது.

மஞ்சள், வெங்காயம், நெல், வாழை உள்ளிட்ட பயிர்களை, விவசாயிகள் நடவு செய்து வரும் நிலையில், அவ்வப்போது லேசான மழை பெய்வதால் விவசாயிகள் நம்பிக்கை அடைந்துள்ளனர். நேற்றும், ஈரோடு உட்பட பல இடங்களில், மதியத்துக்கு மேல் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. வரும் நாட்களில் விவசாயம், நிலத்தடி நீர் மேம்படும் வகையில், கனமழை பெய்யும் என்று, எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

## திருவாரூரில் பலத்த மழை

**திருவாரூர்**: திருவாரூர் மாவட்டம், வலங்கைமானில், 53 மி.மீ மழை பெய்தது. திருவாரூர் மாவட்டத்தில், கடந்த, 5ம் தேதி இரவு கனமழை பெய்தது. நேற்று முன்தினம் இரவும், இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று காலை 8 மணி வரை, திருவாரூரில், 17 மி.மீ., குடவாசலில், 48.80 மி.மீ., முத்துப்பேட்டையில், 1 மி.மீ., நன்னிலத்தில், 26.20 மி.மீ., திருத்துறைப்பூண்டியில், 7.20 மி.மீ., நீடாமங்கலத்தில், 19.20 மி.மீ., வலங்கைமானில், 53 மி.மீ., மாவட்டம் முழுவதும் 206.80 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

## விவசாயிகள் கூட்டமைப்பு ஆலோசனைக் கூட்டம்

**ராமநாதபுரம்** : ராமநாதபுரத்தில், காவிரி- வைகை- குண்டாறு இணைப்பு கால்வாய் நீர்பாசன விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

இக்கூட்டமைப்பின், மாவட்ட தலைவர் பாலசுந்திரமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மதுரைவீரன், சோழந்தூர் மற்றும் 72 கண்மாய் பாசன சங்க தலைவர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். கூட்டமைப்பு

மாவட்ட செயலாளர் சுந்தர்ராஜன் வரவேற்றார். தீர்மானங்கள்: ராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சி நிவாரணத் தொகை வழங்க வேண்டும். காவிரி- வைகை- குண்டாறு இணைப்பு கால்வாய் நீர்பாசன விவசாயிகள் கோரிக்கை மாநாடு ஜூலை 20ல் நடத்துவது, என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆதிமூலம், வக்கீல் கணேசன், வைகை பாசன சங்க துணை செயலாளர் நாகூர்மீரான், நிர்வாகி குருசாமி பலர் பங்கேற்றனர். பெரிய கண்மாய் விவசாயிகள் சங்க, மாவட்ட பொருளாளர் கதிர்வேல் நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கான கருத்தாய்வுக் கூட்டம்

**மரக்காணம்**: மரக்காணம் ஒன்றியத்தில் கரும்பு விவசாயிகளுக்கான கருத்தாய்வு கூட்டம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடந்தது.

நடுக்குப்பம், தேவிக்குளம், வண்டிப்பாளையம், கந்தாடு, புதுப்பாக்கம் விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெயக்குமார் பேசுகையில், மரக்காணம் ஒன்றியத்தில் கரும்பு நடவு செய்ய ஏற்ற நிலங்கள் உள்ளன. கரும்பு ஒரு பணப்பயிராகும். முறையாக சொட்டுநீர் மூலம் சாகுபடி செய்தால் நல்ல வருமானம் கிடைக்கும். சொட்டுநீர் பாசனம் செய்யும் விவசாயிகளுக்கு வேளாண்துறை முழு ஒத்துழைப்பு அளிக்கும் . இப்பகுதியில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுடி செய்துள்ளனர் . நடப்பு ஆண்டில் விவசாயிகள் கூடுதல் சாகுபடி செய்ய வேண்டும் என்றார். வேளாண்மை அலுவலர் எத்திராஜ், உதவி அலுவலர் மோகன் உடனிருந்தனர்.

## வேர்க்கடலை செடிகளில் மஞ்சள் நோய் தாக்கம்

**அவலூர்பேட்டை**: அவலூர்பேட்டை சுற்றுப்பகுதியில் உள்ள வேர்க்கடலை செடிகளில் மஞ்சள் நோய் தாக்கியுள்ளது. மேல்மலையனூர் ஒன்றியத்தில் பல கிராமங்களில் சில தினங்களாக மழை பெய்துள்ளது. வைகாசி மாதத்தில் சில

விவசாயிகள் இருந்த ஈரப்பதத்தை கொண்டு வேர்க்கடலை விதைகளை போட்டனர். ஒரு மாதமான நிலையில் செடிகள் வளர்ந்து வருகின்றன. தற்போது மழை பெய்வதால் அதிக ஈரத் தன்மையுடன் , பசுமையாக வளராமல் மஞ்சள் நிறத்தில் உள்ளன. வேளாண் துறை அதிகாரிகள் இந்த மஞ்சள் நோய் குறித்து விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும்.

## துணை வேளாண் விரிவாக்க மைய கட்டடம் அமைக்கப்படுமா?

**அவலூர்பேட்டை**: எதப்பட்டு கிராமத்தில் துணை வேளாண் விரிவாக்க மையத்திற்கு சொந்த கட்டடம் அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் அவலூர்பேட்டை, எதப்பட்டு ஆகிய இரண்டு இடங்களில் துணை வேளாண் விரிவாக்க மையங்கள் உள்ளன.

எதப்பட்டில் வாடகை கட்டடத்தில் அமைந்துள்ள மையம் செயல்படாத நிலையிலேயே இருந்தது. இது குறித்து கடந்தாண்டு மார்ச் மாதம் தினமலர் நாளிதழில் செய்தி வெளியானது. இதையடுத்து சில தினங்களுக்கு முன்னர் இந்த மையம் செயல்பட துவங்கியது. எதப்பட்டு பகுதியை சேர்ந்த 14 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் இடு பொருட்களை எதப்பட்டு மையத்திலேயே வாங்கி செல் கின்றனர். விவசாயிகள் நலன் கருதி இப்பகுதியில் துணை வேளாண் விரிவாக்க மையத்திற்கு என சொந்த கட்டடம் அமைக்க வேண்டும்.

## மக்காச்சோள தட்டைகள் தீவனத்திற்காக சேமிப்பு

**விருத்தாசலம்**: சிறுபாக்கம் பகுதியில் நிலவி வரும் கடும் வறட்சியால், கால்நடைகள் தீவனத்திற்காக மக்காசோளத் தட்டை சேமித்து வைத்துள்ளனர்.

மங்களூர் ஒன்றியம், சிறுபாக்கம், ரெட்டாக்குறிச்சி, மங்களூர், அடரி, திட்டக்குடி, ஆவட்டி, கழுதூர், பாசார், நல்லூர், ராமநத்தம், ஒரங்கூர், லட்சுமணபுரம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் மாடுகளை வளர்க்கின்றனர். இப்பகுதிகளில், கடுமையான வறட்சி நிலவி வருவதால் மேய்ச்சல் நிலங்களில் புற்கள் கருகியுள்ளன. இதனால், மாடுகளுக்கு, விவசாயிகள் கடைகளில் தீவனம் வாங்கி

கொடுத்து வருகின்றனர். இந்நிலையில், சிறுபாக்கம் பகுதியில் தற்போது மக்காச்சோளம் அறுவடை செய்து வரும் நிலையில், மக்காசோளத் தட்டுகளை கால்நடைகளின் தீவனத்திற்காக சேமித்து வைக்கின்றனர். மங்களூர் வேளாண் அலுவலர் விஜயகுமார் கூறுகையில், "மங்களூர் ஒன்றியத்தில் ஆடிப் பட்டத்தில் மானாவாரியாக ஆண்டுதோறும் 35 ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிர் செய்யப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதத்தில் இறவையில் 100 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த வாரம் அறுவடை செய்த மக்காச்சோள தட்டைகளை விவசாயிகள் உலர்த்தி தீவனத்திற்காக சேமித்து வைக்கின்றனர். தேவைப்படும்போது, அதில் உப்புநீரைத் தெளித்து மாடுகளுக்கு தீவனமாக கொடுப்பார்கள்' என்றார்.

## **வேளாண் அறிவியல் மையம் அறிவுரை**

மானாவாரியில் அதிக மகசூல்: ஊட்டமேற்றிய தொழு உரம் அவசியம்

பெரம்பலூர்: மானாவாரி பயிர்களுக்கு, ஊட்டமேற்றிய தொழு உரம் அவசியம் இட வேண்டும், என ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) விஜயலட்சுமி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

பெரம்பலூர் மாவட்டத்தில், மானாவாரி பயிராக மக்காச்சோளமும், பருத்தியும் அதிகளவில் பயிரிடப்படுகிறது. தற்போது, விவசாயிகள் கோடை உழவு பணிகளை மேற்கொண்டு வரும் நிலையில், ஆடி பருவத்தில் மழை பெய்தவுடன் பருத்தி, மக்காச்சோளம் ஆகியவை, மானாவாரி பயிராக விதைப்பு செய்யப்படும்.

மானாவாரி பயிர்களில், உரமிடும் முறைகளைப் பொறுத்தே மகசூலின் அளவு அதிகரிக்கிறது. இதை கருத்தில் கொண்டு, மானாவாரி பயிர்களுக்கான அடி உரங்களை தொழு உரத்துடன், ஊட்டமேற்றி பயன்படுத்தும் போது தொழு

உரம் மற்றும் ரசாயன உரங்களின் முழு பயன் கிடைத்து, மகசூலை அதிகரிக்க முடியும்.

ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க, ஒரு ஹெக்டருக்கு, 750 கிலோ அளவுள்ள நன்கு மக்கிய தொழு உரத்தையும், மண் பரிசோதனையின்படி பரிந்துரைக்கப்பட்டுள்ள அடியுரமாக இடும் உரங்களில், மணிச்சத்து தரவல்ல சூப்பர் பாஸ்பேட் உரம் முழு அளவையும் எடுத்துக்கொள்ள வேண்டும். தொழு உரத்தை, மூன்று சம பாகமாகவும், சூப்பர் பாஸ்பேட் உரத்தை, இரு சம பாகமாகவும் பிரித்துக்கொண்டு, கீழே ஒரு பங்கு தொழு உரம், பிறகு ஒரு பங்கு சூப்பர் பாஸ்பேட், ஒரு பங்கு தொழு உரம், மீதமுள்ள ஒரு பங்கு சூப்பர் ஃபாஸ்பேட், தொழு உரம் ஆகியவற்றை, ஒன்றன் மேல் ஒன்றாக பரப்பி கலக்க வேண்டும்.

தொழு உரத்தில் ஈரப்பதம் இல்லையெனில், சிறிது தண்ணீர் தெளித்து நன்கு கலந்து, நிழலான பகுதியில் குவித்து வைத்து, மேல் பகுதியில் களிமண் சேற்றை பூசி மெழுகிவிட்டு 30 நாள்கள் வரை வைத்திருக்க வேண்டும். மண் பரிசோதனை செய்ய இயலாத போது, பருத்தி சாகுபடிக்கு, ஒரு ஹெக்டருக்கு பொதுப் பரிந்துரையாக கொடுக்கப்பட்டுள்ள 375 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை, 750 கிலோ தொழு உரத்துடன் ஊட்டமேற்றி பயன்படுத்தலாம். சூப்பர் பாஸ்பேட்டை தொழு உரத்துடன் ஊட்டமேற்றும் போது, தொழு உரத்தில் உள்ள நுண்ணுயிர்களும், அமிலங்களும் அங்கக பாஸ்பேட்டாக மாறுவதோடு தொழு உரமும் நன்கு செறிவுள்ள உரமாக மாறுகிறது. ஊட்டமேற்றிய தொழு உரத்தை, கடைசி உழவுக்கு முன், அடியுரமாக இடும் தழைச்சத்தான யூரியா மற்றும் சாம்பல் சத்தான பொட்டாஷ் ஆகியவற்றுடன் கலந்து, சாகுபடி வயல் முழுவதும் சீராக தூவி சாகுபடி செய்ய வேண்டும். மண் பரிசோதனையின்படி பரிந்துரைக்கப்பட்ட அடி உரங்களை, தொழு உரத்துடன் ஊட்டமேற்றி பயன்படுத்தும்போது, பயிர்கள் விரைவாக சத்துக்களை

எடுத்துக்கொண்டு வளர்கின்றன. மேலும், தேவையில்லாத ரசாயன உர அளவு மற்றும் செலவை குறைப்பதோடு, இயற்கை உரங்களின் செயல்பாட்டை அதிகரித்து, மண்ணின் தரம் பாதுகாக்கப்படுவதோடு, மகசூலும், 15 முதல், 20 சதம் வரை அதிகரிக்க செய்ய முடியும்.

மேலும் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை அல்லது வேளாண் அலுவலர்களை அணுகி பயன்பெறலாம்.

## சிவகங்கையில் மழையால் விவசாய பணி துவக்கம்! வேளாண் துறை சார்பில் வாடகைக்கு கருவி

**சிவகங்கை** : சிவகங்கையில், பெய்து வரும் மழையை பயன்படுத்தி, நிலத்தை சீரமைத்து விவசாய பணியை துவக்க,வேளாண் துறை,கூட்டுறவு வங்கிகள் சார்பில் குறைந்த வாடகைக்கு, கருவிகள் வழங்கப்படுகிறது. சிவகங்கை, மாவட்டத்தில் நெல், கரும்பு, நிலக்கடலை, மிளகாய் பயிரிடும் பணி நடந்து வந்தன. கடந்த 2 ஆண்டுகளாக, மாவட்ட அளவில், மழை பொய்த்ததால், விவசாய பணி குறைந்து, வறட்சி மாவட்டமாக காட்சி அளித்தது நல்ல மழை: கடும் கோடை வெயிலின் தாக்கத்தால், மாவட்டத்தில், குடிநீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டது. மழையின்றி, நீர்நிலை வறண்டு, கால்நடைகள் தண்ணீரின்றி தவித்தன. திருப்புவனம், காளையார்கோவில் போன்ற பகுதிகளில், குடிநீருக்காக, காலி குடங்களுடன் பல கி.மீ., தூரம் அலைந்த நிலை மக்களுக்கு ஏற்பட்டது. இந்நிலையில், ஜூலை துவக்கத்தில் இருந்து, சிவகங்கை மாவட்டத்தில், பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. கடந்த வாரம், அதிகபட்சமாக 48 மி.மீ., குறைந்தது 24 மி.மீ., மழை பெய்தது. அதை தொடர்ந்து, கடந்த 6ம்தேதி மாலை, பலத்த மழை பெய்தது. இடி, மின்னல், பலத்த காற்று இன்றி மழை பெய்ததால்,பெரிய அளவிலான பாதிப்பு இல்லை.

சிவகங்கையில், ஒரே நாளில் 60 மி.மீ., மழை பதிவானது. துவக்கம்: இதையடுத்து, விவசாயிகள், விவசாய பணிகளை துவக்கியுள்ளனர். ஆங்காங்கே, நிலங்களை பண்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகளின் தேவைக்கேற்ப, நிலங்களை பண்படுத்த, போர்வெல் கிணறுகளில் நீர் ஊற்றுக்களில் உள்ள அடைப்புகளை எடுக்க, வேளாண்மைதுறை ( பொறியியல் பிரிவு) சார்பில், குறைந்த வாடகைக்கு, விவசாய கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் இதை பயன்படுத்தி, நிலங்களை பண்படுத்துதல், நெல் நடவு, நாற்று பாவுதல், களையெடுத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளலாம் என, வேளாண்மைதுறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர,மாவட்டத்தில் உள்ள 120 தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கங்களில்,பவர் டிரில்லர்,ஸ்பிரேயர், நடவு இயந்திரம்,களையெடுக்கும் கருவி உள்ளிட்டவை வாடகைக்கு விடப்படுகிறது. விவசாயிகள் இதை பயன்படுத்தலாம். அரசு நிர்ணயித்த வாடகையை விட கூடுதலாக வசூலித்தால், புகார் தெரிவிக்கலாம், என, வேளாண்மை(பொறியியல் துறை) செயற்பொறியாளர் ராஜகோபால் தெரிவித்தார். மேலும் விபரம் வேண்டுவோர், சிவகங்கை - 04575 - 240 288, காரைக்குடி - 99422 83830 என்ற எண்களில் அறிந்து கொள்ளலாம், என்றார்.

விவசாய கருவிகள் வாடகை (ரூபாயில்)

டிராக்டர் 390 (1 மணி நேரம்)

புல்டோசர் 950 ( 1 மணி நேரம்)

போர் கிளீனர் கம்ப்ரசர் 1,250 (டீசல் செலவு தனி)

போர் ஊற்று நீர் சரிபார்த்தல் 1,250

நெல் அறுவடை இயந்திரம் 1,600 வீதம் வசூலிக்கப்படும்.

## இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு துவக்கம்

**வேதாரண்யம்**: வேதாரண்யம் அடுத்த கத்திரிப்புலத்தில், திருமறைக்காடு இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு துவக்க விழா நடந்தது நாகை நபார்டு வங்கி துணை பொதுப்மேலாளர் கணேஷ், விழாவை துவக்கி வைத்தார். கூட்டமைப்பு தலைவர் சொக்கலிங்கம் வரவேற்றார். செயலாளர் பாண்டியன் அறிக்கை வாசித்தார்

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் நீதிமாணிக்கம், திருச்சி சந்தை நுண்ணறிவு வணிக மேம்பாட்டு மைய வேளாண்மை அலுவலர் பிரபாகரன், நாகை கால்நடை இணை இயக்குனர் ராஜசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் கருத்தரங்கத்தில், முழுமையான இயற்கை விவசாயத்திற்கு, விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும், நஞ்சில்லா எதிர்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டும், பாரம்பரிய நெல் ரகங்களின் முக்கியத்துவம் குறித்தும், விவசாயிகளிடம் விளக்கி கூறப்பட்டது. சிறப்பாக செயல்படும் விவசாயக் உழவர் மன்ற குழுக்களுக்கு சான்றிதழ், பரிசு வழங்கப்பட்டன. நாகை முன்னோடி வங்கி மேலாளர் கதிர்வேல், சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய துணை பேராசிரியர் இளையபாரதி, நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன், தஞ்சை இயற்கை மருத்துவர் சித்தர், இந்திய பாரம்பரிய அறிவியல் மைய செயல் இயக்குனர் சுபாஷினி ஸ்ரீதர், உழவர் மன்றம் மற்றும் மகளிர் குழுப் பிரதிநிதிகள், முன்னோடி விவசாயிகள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். கூட்டமைப்பு பொருளாளர் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்:ரூ. 70 லட்சத்துக்கு விற்பனை

**ராசிபுரம்**: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 70 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது.

ஈரோடுக்கு அடுத்ததாக, நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்க்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடக்கும்.

தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர்.

இந்நிலையில், நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,400 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,479க்கும், குறைந்த பட்சம், 6,039 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,549க்கும், குறைந்த பட்சம், 5,859 ரூபாய்க்கும் ஏலம்போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 17,459க்கும், குறைந்த பட்சம், 9,889 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 70 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## கால்நடை தீவனம் பயிரிடும் விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம்

**திருத்தணி** : கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள், தீவனம் பயிரிடுவதற்கு, 100 சதவீதம் மானியத்துடன் அரசு கடனுதவி வழங்குகிறது.

மாவட்டத்தில், திருத்தணி, திருவள்ளூர் மற்றும் பொன்னேரி ஆகிய மூன்று கோட்ட கால்நடை உதவி இயக்குனர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. கடனுதவி : மாநில தீவன அபிவிருத்தி திட்டம், 2014-15ன் கீழ் கால்நடைகள் (ஆடு, மாடுகள்) வளர்த்து வரும் விவசாயிகளுக்கு, தீவனம் பயிரிடுவதற்கு அரசு கடனுதவி வழங்குகிறது.கால்நடை தீவனமான, கோ-03, கோ-04, சோளம், அகத்தி மற்றும் அசோலா ஆகியவை பயிரிட விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியம் வழங்குகிறது. குறைந்தபட்சம் கால் ஏக்கர், அதிகபட்சம் ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இந்த மானியம் வழங்கப்படுகிறது. சோளம், அகத்தி : இதுகுறித்து, திருத்தணி கோட்ட கால்நடை துறை உதவி இயக்குனர் செல்லத்துரை கூறியதாவது: மாடுகளின் தீவனமான கோ-03, கோ-04 மாவட்டத்தில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட உள்ளது. திருத்தணி

கோட்டத்திற்கு, 50 ஏக்கர். இதற்கு, பசுதீவன கரணைகள், உரம் வழங்கப்படும். ஒரு ஏக்கருக்கு, 8,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். இது க00 சதவீதம் ஆகும். சோளம், மாவட்டத்தில், இதே போல், 100 ஏக்கர் பரப்பிலும், திருத்தணி கோட்டத்தில், 35 ஏக்கர் நிலத்தில் பயிரிடலாம், இதற்கு ஒரு ஏக்கருக்கு, 2,200 ரூபாய் மானியம் வழங்கப்படும். அகத்தி தீவனம், மாவட்டத்திற்கு, 50 ஏக்கர், திருத்தணி கோட்டத்திற்கு, 15 ஏக்கரில் பயிரிடலாம். ஒரு ஏக்கருக்கு நான்கு கிலோ விதைகள் இலவசமாக வழங்கப்படும்.

இம்மாத இறுதிக்குள்... : அசோலா தீவனம், மாவட்டத் தில், 300 நபர்களும், திருத்தணி கோட்டத்தில், 100 நபர்களும் பயிரிடலாம். ஒரு நபருக்கு தலா 1,600 ரூபாய் மானியம் வழங்குகிறது.சொட்டு நீர் பாசனத்திற்கு, ஒரு நபருக்கு, 25 ஆயிரம் ரூபாய் கடனுதவி, எ5 சதவீத மானியம் வழங்கப்படும்.தீவனங்கள் பயிரிட விருப்பம் உள்ளவர்கள், விண்ணப்பங்களை, இம் மாதம் இறுதிக்குள் அந்தந்த பகுதி கால்நடை மருந்தகம் மற்றும் கிளை நிலையங்களில் சமர்ப்பிக்க வேண்டும். என்றார்.

## போதிய விலை கிடைக்காததால் மக்காச்சோள விவசாயிகள் கவலை

**தர்மபுரி**: மக்காசோளத்துக்கு போதிய விலை இல்லாததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில், ஒன்றாக உள்ளது மக்காசோளம். பென்னாகரம், பாலக்கோடு, அரூர் உள்பட மாவட்டம் முழுவதும் மக்காசோளம் வீரிய ரகங்கள் இறவை பாசன வசதியில், 7,954 ஹெக்டேர், நாட்டு ரகம், 588 ஹெக்டேர் மானாவரியாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மூன்று மாத கால பயிரான மக்காசோளத்தை, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த, பெரும்பாலான விவசாயிகள், இறவை பாசனத்தில் சாகுபடி செய்யவே அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஒரு ஏக்கருக்கு, மூவாயிரம் கிலோ முதல், நான்காயிரம் கிலோ வரை மக்காசோளம் மகசூல் கிடைக்கிறது. மாவட்டம் முழுவதும், ஆண்டுக்கு, சரசரியாக, மூன்று கோடியே, 11 லட்சத்து, 26 ஆயிரம் கிலோ மக்காசோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், பெருமளவு கால்நடை தீவனத்துக்கும், குறைந்தளவு உணவு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உற்பத்தியாகும், மக்காசோளத்தை உரிய விலையில் விற்பனை செய்ய, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமல் உள்ளதாக, விவசாயிகள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து, கடமடையை சேர்ந்த விவசாயி சுப்பிரமணி கூறியதாவது:

மக்காசோளம் குறைந்த கால பயிராகவும், குறைந்த தண்ணீர் வசதியில் வளரக்கூடியதால், இப்பகுதியில் உள்ள விவசாயிகள் மக்காசோளத்தை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள், பெரும்பாலும் நேரடியாக மக்காசோளத்தை கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், வியாபாரிகள் தங்களுக்குள், சிண்டிகேட் அமைத்து கொண்டு விவசாயிகளிடம், குறைந்த விலைக்கு மக்காசோளத்தை வாங்கி செல்கின்றனர். விவசாயிகள் நேரடியாக மக்காசோளத்தை சந்தைபடுத்த போதிய வசதி இல்லாததால், தங்களை தேடிவரும் வியாபாரிகளிடம், அவர்கள் நிர்ணயம் செய்யும் விலைக்கு, விவசாயிகள் மக்காசோளத்தை விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது.

கடந்தாண்டு, ஒரு கிலோ மக்காசோளம், 15 ரூபாய் முதல், 18 ரூபாய் வரை ஆனாது. தற்போதும், ஒரு கிலோ மக்காசோளத்துக்கு வியாபாரிகள், 18 ரூபாய் விலை நிர்ணயம் செய்து, வாங்கி செல்கின்றனர்.

மக்காசோள சாகுபடி செலவு அதிகரித்துள்ள நிலையில், விலையில் மாற்றம் இல்லாததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மக்காச்சோள வியாபாரிகளுக்கு உரிய விலை கிடைக்க மாவட்ட நிர்வாகம், தர்மபுரி மாவட்டத்தில் மக்காசோள கொள்முதல் மையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மக்காசோளத்தை மதிப்பு கூட்டு பொருட்களாக விற்பனை செய்ய தேவையான பயிற்சி மற்றும் அவற்றை விற்பனை செய்ய வழிவகைகளை ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## புடலங்காய் விளைச்சல் ஜோர் விவசாயிகள் மகிழ்ச்சி

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில் காய்கறிகள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாய தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், நெல், கரும்பு, மஞ்சள், தக்காளி, பருத்தி, கேழ்வரகு உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இவற்றுக்கு, போதிய விலை கிடைக்காமல் உள்ளதாலும், மாவட்டத்தில் ஆண்டுக்கு ஆண்டு பருவ மழை பொய்த்து வருகிறது.

இதனால், மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள விவசாயிகள், கட்டுபடியான விலை, மற்றும் குறைந்த பாசன வசதியில் மகசூல் தரக்கூடிய, காய்கறி பயிர்களை கடந்த சில ஆண்டுகளாக சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள், அவரை காய், வெண்டைக்காய், பாகற்காய், புடலங்காய் உள்ளிட்டவற்றை சாகுபடி செய்து வருகின்றனர்.

குறிப்பாக, பென்னாகரம், நல்லம்பள்ளி, பாலக்கோடு உள்ளிட்ட பகுதிகளில், புடலங்காய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து, விவசாயி கணேசன் கூறியதாவது:

காய்கறிகளுக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருவதுடன், தொடர்ந்து நல்ல விலையும் கிடைத்து வருகிறது. இதனால், பாலக்கோடு உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், புடலங்காய் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், வியாபாரிகள், நேரடியாக விவசாயிகளிடம் வந்து, இவற்றை கொள்முதல் செய்து வருவதால், விவசாயிகளுக்கு விற்பனை செய்ய எடுத்து செல்லும் செலவு குறைந்துள்ளது. அன்றாட சந்தை நிலவரப்படி, புடலங்காய் விற்பனை

செய்யப்படுவதால், விவசாயிகளுக்கு போதிய வருவாய் கிடைத்து வருகிறது, என்றார்.

**செடியில் வீணாகும் பசுந்தேயிலை பறிக்காமல் கிடக்கும் "கரட்டு' இலைகள்**

**மஞ்சூர்** : தேயிலை வரத்து அதிகரிப்பின் காரணமாக, இலைகளை குறிப்பிட்ட நாளில் பறிக்க முடியாமல் போனதால், பல லட்சம் கிலோ பசுந்தேயிலை தோட்டத்திலேயே வளர்ந்து "கரட்டு' இலையாக மாறி வீணாகி வருகின்றன. மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பாண்டு துவக்கத்தில் போதிய மழை பெய்யாத நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு பெய்த பரவலான மழையால், தேயிலை செடிகளுக்கு ஏற்ற சீதோஷ்ணம் கிடைத்ததால் படிப்படியாக பசுந்தேயிலை வரத்து அதிகரிக்க துவங்கியது.கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் கிலோவிலிருந்து 35 ஆயிரம் கிலோ வரைக்கு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டது.

பசுந்தேயிலை கொள்முதல் அதிகரித்ததால், தேயிலை தூள் உற்பத்தி செய்வதில் தொழிற்சாலை நிர்வாகம் திணறும் நிலை ஏற்பட்டதை அடுத்து, அனைத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட அளவில் பசுந்தேயிலை கொள்முதல் செய்யும் நோக்கில் "கோட்டா' முறை

அமல்படுத்தப்பட்டது.கோட்டா முறை ஒருபுறம் அமல்படுத்தினாலும், அவ்வப்போது விடுமுறை அளிக்கப்படுகிறது. இதனால், தேயிலை தோட்டத்தில் உள்ள இலைகளை குறிப்பிட்ட நாளில் பறிக்க முடியாமல் தேயிலை விவசாயிகள் தவிக்கின்றனர். தனியார் தொழிற்சாலைகள் கொள்முதல் செய்ய கொண்டு சென்றாலும் அங்கும் இலையை வாங்க யாரும் இல்லை. தோட்டத்தில் வீணாகும் அவலம் : மஞ்சூர் சுற்றுப்புற பகுதியில் மட்டும் 4000

எக்டர் பரப்பளவில் தேயிலை விவசாயம் நடக்கிறது. நடப்பாண்டு ஜனவரி மாத்திலிருந்து மே மாதம் வரை பசுந்தேயிலை கொள்முதல் 20 சதவீதத்தை கூட எட்டவில்லை. வரத்து அதிகரிப்பின் காரணமாக கடந்த ஒரு மாதத்தில் பசுந்தேயிலை வரத்து பறிக்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது.இந்நிலையில், மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான எடக்காடு, தங்காடு ஓரநள்ளி, காந்திகண்டி, அட்டுபாயில், லாரன்ஸ், சிவசக்தி நகர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 250 ஏக்கர் தேயிலை தோட்டங்களில் பல லட்சம் கிலோ பசுந்தேயிலை பறிக்க முடியாமல் போனதால், தேயிலை தோட்டத்திலேயே அவை, கரட்டு இலையாக மாறி வருகின்றன.

சிறுதேயிலை விவசாய சங்க உறுப்பினர் அர்ஜுனன் கூறுகையில்,"" தோட்டங்களில் வளர்ந்துள்ள அனைத்து இலைகளையும் பறிக்காமல் போனதால் பசுந்தேயிலை கரட்டு இலையாக மாறிவீணாகியுள்ளது. தேயிலை விவசாயிகளின் நஷ்டத்தை போக்க மாநில அரசு தான் கண் திறக்க வேண்டும்,''என்றார்.

## இலவச மண் பரிசோதனை; ஜூலை 11 ல் நடத்த ஏற்பாடு

**கன்னிவாடி** : டி.புதுப்பட்டியில், ஜூலை 11 ல் விவசாயிகளுக்கான இலவச மண்பரிசோதனை முகாம் நடக்க உள்ளது.

திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மாணவியர், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் டி.புதுப்பட்டியில், கிராம திறனாய்வு பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். சிறப்பு அலுவலர் பாலமோகன் தலைமையில், இப்பகுதியின் விவசாய நிலை குறித்த தகவல்களை சேகரிக்கின்றனர். நீர், உரம், பயிர் மேலாண்மை நுட்பங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து, மண்

பரிசோதனை முகாம் நடத்த உள்ளனர். டி.புதுப்பட்டி நாவாய்கோயில் தோட்டத்தில், ஜூலை 11 ல் இம்முகாம் நடக்கிறது. இதில், வேளாண்மை, தோட்டக்கலை வல்லுனர்கள், மண் பரிசோதனையின் அவசியம், மண் சேகரிப்பு முறை, பயிர், நீர் மேலாண்மைக்கான பரிந்துரைகள், அரசுத்திட்டங்கள் குறித்து விளக்க உள்ளனர்.டி.புதுப்பட்டி, கன்னிவாடி, ஆலத்தூரான்பட்டி, தெத்துப்பட்டி, பண்ணைப்பட்டி, மாங்கரை, நெட்டியபட்டி சுற்றுப்புற கிராமங்களைச்சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று பயனடையலாம்.

## சொட்டு நீர் பாசனத்துக்கு மாறும் விவசாயிகள் : நிலத்தடி நீர் மட்ட பற்றாக்குறையை சமாளிக்க ஏற்பாடு

**ஓசூர்**: ஓசூர் தாலுகாவில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதாலும், கூலி ஆட்கள் பற்றாக்குறையாலும் விவசாயிகள், சொட்டு நீர் பாசனம் முறையில் காய்கறி சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் விவசாயத்துக்கு சாதகமான குளிர்ந்த சீதோஷ்ண நிலையும், நல்ல செம்மண் வளமும் காணப்படுகிறது. இதை பயன்படுத்தி விவசாயிகள் ஆண்டு முழுவதும், காய்கறிகள், மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

இங்கு உற்பத்தியாகும், காய்கறிகள், மலர்கள், உள்ளூர் உழவர்சந்தைகளுக்கு மட்டுமின்றி வெளிமாநிலங்கள், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் உள்ள மொத்த காய்கறி, மார்க்கெட்டுக்கு, தினம் லாரிகள் மூலம் ஏற்றுமதியாகிறது.

கடந்த காலத்தில் விவசாயிகள் பாத்தி அமைத்து கால்வாய் பாசனம் மூலம் காய்கறி, மலர் சாகுபடி மேற்கொண்டனர். இதனால், செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சும்போது கால்வாயில் அதிகமான தண்ணீர் சென்று வீணாகி வந்தது. தினம் நீர் பாசனம் செய்வதற்கு கூலி ஆட்களும் அதிகமாக தேவைப்பட்டதால், கூடுதல் பராமரிப்பு செலவு ஏற்பட்டது.

இந்நிலையில், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் கடந்த இரு ஆண்டாக பருவமழை ஏமாற்றி வருகிறது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கிணற்று பாசனம்,

ஏரி பாசனம் மற்றும் அணை பாசனம் கேள்விகுறியாகி விட்டது. தொழிலாளர்கள் ஊதியம், ஆட்கள் பற்றாக்குறையால், விவசாய சாகுபடியில் எதிர்பார்த்த லாபம் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை.

அதனால், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் விவசாயிகள் கிணற்று பாசனத்துக்கு, பதில் போர்வெல் அமைத்து, சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாய பயிர்களுக்கு நீர் பாசனம் மேற்கொள்ளும் புதிய தொழில்நுட்ப முறைக்கு மாறியுள்ளனர்.

கடந்த காலத்தில் மலர் சாகுபடியில் மட்டும் சொட்டு நீர் பாசனம் மேற்கொண்டனர். தற்போது, நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதாலும், கூலி ஆட்கள் பற்றாக்குறையாலும், அனைத்து வகை காய்கறி சாகுபடியிலும், விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் பாசனம் மேற்கொள்ள துவங்கி உள்ளனர்.

சொட்டு நீர் பாசனத்தில், விவசாய பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு கூலி ஆட்கள் தேவைப்படுவதில்லை. தானாக, செடிகளுக்கு நிலத்தில் பதிக்கப்பட்ட டியூப் குழாய்கள் மூலம் சொட்டு சொட்டாக செடிகளுக்கு தேவையான அளவு செல்கிறது. இதன் மூலம் தண்ணீர் வீணாவது முற்றிலும் தடுக்கப்படுகிறது.

வேளாண் மற்றும் தோட்டக்கலைதுறை சார்பில், நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாக்க, விவசாயிகள் மத்தியில் சொட்டு நீர் பாசனத்தை ஊக்குவிக்க, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதனால், ஓசூர் பகுதியில் தற்போது விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் காய்கறி சாகுபடி மேற்கொள்ள ஆர்வமாகி வருகின்றனர். ஓசூர் தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறியதாவது:

சொட்டு நீர் பாசனத்தில் தண்ணீர் தேங்கி செடிகள் அழுகாது. களை அதிகம் வராது. உரம் தண்ணீருடன் கலந்து செடிகளுடைய வேருக்கு நேரடியாக வழங்குவதால் உரம் வீனாக வாய்ப்பில்லை. சொட்டு நீர் பாசனத்தில் அதிக பரப்பில் காய்கறி சாகுபடி செய்யலாம். பராமரிப்பு செலவு குறைகிறது. நான்கு மாதத்தில் மகசூல் கிடைக்கும் செடிகளில், சொட்டு நீர் பாசனம் மூலம் கூடுதலாக ஒருமாதம் மகசூல் கிடைக்கிறது. சாதாரண பாசன முறையில் கிடைக்கும் மகசூலை

காட்டிலும் சொட்டு நீர் பாசனத்தில் காய்கறி சாகுபடி மேற்கொண்டால் 30 சதவீதம் மகசூல் கூடுதலாக கிடைக்கிறது, என்றனர்.

## தரிசாக மாறிய மேய்ச்சல் நிலம் கால்நடை வளர்ப்பு மந்தம்

**ஓசூர்**: ஓசூர் அருகே உள்ள, கால்நடை பண்ணையில், கடும் வறட்சி காரணமாக, தரிசாக மாறிய மேய்ச்சல் நிலங்களால், கால்நடை வளர்ப்பு தொழில் மற்றும் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஓசூரை அடுத்த மத்திகிரியில், ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடை பண்ணை உள்ளது. சுமார், 1,641.41 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த பண்ணை, 1924ம் ஆண்டு, கால்நடை இனப்பெருக்க மையமாக, வேளாண்மை துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், 1970ம் ஆண்டு, கால்நடை பண்ணையாகவும், அதைத்தொடர்ந்து, கால்நடை ஆய்வு மையமாகவும், மாற்றப்பட்டது.

இந்த பண்ணையில், உயர்தர மாடுகள் மற்றும் ஆடுகள் வளர்க்கப்படுகிறது. மேலும், புதிய வகை கலப்பின மாடுகள், ஆடுகள் உருவாக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுதவிர, கால்நடைகளுக்கு தேவையான, தீவனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த இரு ஆண்டுகளாக, வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை முற்றிலும் பொய்த்து போனதால், கடும் வறட்சி நிலவி வருகிறது. இதனால், ஓசூர் அருகே, மத்திகிரியில் உள்ள, கால்நடை பண்ணையில் பராமரிக்கப்படும் மேய்ச்சல் நிலம், தீவன புல் இல்லாமல், தரிசு நிலமாக மாறியுள்ளது. இதன் காரணமாக, கால்நடை வளர்ப்பு தொழில் மற்றும் உற்பத்தி மந்தமடைந்துள்ளது.

ஓசூர் பகுதியில், தற்போது, கடும் வறட்சி நிலவி வருவதால், கால்நடைகளுக்கு, பச்சை தீவனங்கள் கிடைப்பது சிரமமாக உள்ளது. இதனால், கெலமங்கலம், ராயக்கோட்டை, கந்திகுப்பம், பாகலூர் உள்ளிட்ட மாடு மற்றும் ஆட்டு சந்தைகளுக்கு, அதிகளவு கால்நடைகள், விற்பனைக்கு வருகிறது.

விவசாயிகளின் நிலைமையை, சாதகமாக பயன்படுத்தி கொள்ளும் வியாபாரிகள், குறைந்த விலைக்கு கால்நடைகளை வாங்கி, கேரளா, ஆந்திரா, கர்நாடகாவில், இறைச்சிக்காக, கொள்ளை லாபத்துக்கு விற்பனை செய்து வருகின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆடு, மாடு வளர்ப்பு மூலம், விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் கிடைத்து வந்தது. ஆனால், கடும் வறட்சி காரணமாக, கால்நடை வளர்ப்பு தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

தினமணி

**பண்ணைப் பசுமைக் கடைகளில் ரூ.10.39 கோடி காய்கறி விற்பனை**

**சென்னை,**

பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் ரூ.10.39 கோடி மதிப்பிலான காய்கறிகள் இதுவரை விற்பனையாகியுள்ளன.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமதேனு கூட்டுறவு பல்பொருள் அங்காடியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அவர் கூறியது:

கூட்டுறவுத் துறை மூலம் நடத்தப்படும் காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியில் பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் தரமாகவும், குறைந்த விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைக்கு தினசரி வரும் காய்கறிகள் அனைத்தும் காலை 10 மணிக்கே விற்பனை ஆகிவிடுகிறது. தமிழகத்தில் மொத்தம் 52 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் உள்ளன. அவற்றின் மூலம் இதுவரை 3 ஆயிரத்து 741 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன்

மதிப்பு ரூ.10.39 கோடி.

கூட்டுறவு மருந்தகங்களில் மருந்துகளின் விலையில் ரூ. 10 முதல் ரூ.15 வரை தள்ளுபடி அளிக்கப்படுகிறது. சென்னையில் ஏழு கூட்டுறவு மருந்துக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மருந்துக் கடையிலும் நாளொன்றுக்கு சராசரியாக ரூ.12 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றார் செல்லூர் கே.ராஜூ.

காமதேனு கூட்டுறவு பல்பொருள் அங்காடியை திடீர் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் பொருள்களின் தரத்தை கேட்டறிந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ. உடன், திருவல்லிக்கேணி கூட்டுறவுச்

வைகை அணை அருகே புதிதாகக் கட்டப்பட்டு திறக்கப்படாமல் உள்ள கோழி விரிவாக்க மையம்

ஆண்டிபட்டி:
தேனி மாவட்டம், வைகை அணை அருகே கோழி விரிவாக்க மையத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் பயன்பாட்டுக்கு வர நடவடிக்கை எடுக்கவேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் கறிக்கோழி மற்றும் முட்டைக் கோழிகள் வளர்வதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. எனவே, இப்பகுதி விவசாயிகள் கோழி வளர்ப்பதற்கு ஆலோசனைகள் வழங்குவதற்காக, வைகை அணை அருகே சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் கடந்த 1965ஆம் ஆண்டு கோழி விரிவாக்க மையம் அமைக்கப்பட்டது.

இம்மையத்தின் மூலம், தேனி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் கோழி வளர்ப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வந்தன. இதனால், தேனி மாவட்ட விவசாயிகள் பெரிதும் பயனடைந்து வந்தனர்.

ஆனால், இம்மையம் முறையாக பராமரிக்கப்பட்டு வராததால், குஞ்சுகளின்

உற்பத்தி குறைந்தது. இதையடுத்து, கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்னரே இம்மையம் மூடப்பட்டது. இதன் கட்டடங்கள் தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளது.

இது குறித்த செய்தி, கடந்த 2012 ஜூன் 25ஆம் தேதி தினமணியில் வெளியாகிஇருந்தது.

அதை அடுத்து, இம்மையத்தை கால்நடை இணை இயக்குநர் பார்வையிட்டு, திரும்பவும் கோழி விரிவாக்க மையத்துக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருந்தார். தொடர்ந்து, கடந்த 2012-13ஆம் ஆண்டில் கோழி விரிவாக்க மைய அலுவலகக் கட்டடம் கட்ட ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

இருப்பினும், புதிய கட்டடங்கள் மற்றும் குஞ்சுகள் பராமரிப்பு மையம் கட்டப்பட்டு, பல மாதங்களாகியும் பயன்பாட்டுக்கு வராமல் உள்ளன. எனவே, கோழி விரிவாக்க மையக் கட்டடத்தை விரைவில் செயல்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என, இப்பகுதி விவசாயிகள் ஆர்வமுடன் எதிர்பார்த்துள்ளனர்.

**வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

**தேனி**:

தேனி, போடி வட்டாரங்களில், வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை வணிகம் மற்றும் பட்டு வளர்ச்சித் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை, செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தர்மாபுரியில் வேளாண்மைத் துறை சார்பில், நீர்வடிப் பகுதி அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த நீர்வடி மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றின் கீழ் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், மானிய விலையில் வழங்கப்பட்ட பழ மரக்கன்றுகள் நடவுத் திடல்

ஆகியவற்றை ஆட்சியர் பார்வையிட்டார். மேலும், சீலையம்பட்டியில் தோட்டக் கலைத் துறை சார்பில், தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின் கீழ் மலர் சாகுபடி நடைபெறுவதை ஆட்சியர் பார்வையிட்டார்.

கூழையனூரில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ள சோலார் சக்தி மோட்டார் பம்பு, பெருமாள்கவுண்டன்பட்டியில் பட்டு வளர்ச்சித் துறை உதவியுடன் நடைபெற்று வரும் மல்பரி சாகுபடி திடல் மற்றும் பட்டு வளர்ப்புக் கூடம், சில்லமரத்துப்பட்டியில் வேளாண்மை வணிகத் துறை சார்பில் நடைபெற்று வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் புதிய அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, வேளாண்மை இணை இயக்குநர் கோ. சுந்தரம், தோட்டக் கலை இணை இயக்குநர்(பொறுப்பு) பொ. ராஜன், வேளாண்மை துணை இயக்குநர் செ. முத்தையா, பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் ஆல்பர்ட், வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ஈஸ்வரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரங்கநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>குளத்தில் மண் எடுப்பதைத் தடுக்க விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்</u>

**அன்னூர்**:
காட்டம்பட்டி குளத்தில் மண் எடுப்பதைத் தடுப்பது குறித்து, அன்னூர் அருகே குன்னத்தூரில் விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

அன்னூர் வட்டம், காட்டம்பட்டி ஊராட்சிக்கு உள்பட்ட காட்டம்பட்டி குளத்தில் (க.ச.எண். 177), 4,4000 கனமீட்டர் அளவுக்கு கிராவல் மண் எடுப்பதற்கு தனியார் ஒருவருக்கு மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.

காட்டம்பட்டி குளத்தில் மண் எடுப்பதால் சுற்றுவட்டாரக் கிராமங்களின் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்படும் நிலை உள்ளது. அதனால் காட்டம்பட்டி குளத்தில் மண் எடுக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தப் போராட்டம் நடத்துவதாக தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து, காட்டம்பட்டி குளத்தில் மண் எடுப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை ரத்து செய்ய வலியுறுத்துவது எனவும், அன்னூர் ஒன்றியத்திற்கு உள்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் குளம், குட்டை பாதுகாப்பு இயக்கம் சார்பில் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் 200-க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**<u>சேவூர் ஒழுங்குமுறைக் கூடத்தில் நிலக்கடலை ஏலம்</u>**

**அவிநாசி**:

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ. 2.40 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, நிலக்கடலை 157 மூட்டைகள் வந்திருந்தன.

குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 3,810 முதல் ரூ. 4,000 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,500 முதல் ரூ. 3,720 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 2.40 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 6 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 21 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி சேலத்தில் ஜூலை 28-இல் ஆர்ப்பாட்டம்**

**சேலம்**:

தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி, ஜூலை 28-ஆம் தேதி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல், பொதுச் செயலர் எம்.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் சேலத்தில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியது:

பால் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப ஆவின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று உற்பத்தியாளர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியும் மாநில அரசு கண்டுகொள்ளவில்லை. அதேநேரம், எங்களது போராட்டத்தில் நியாயம் இல்லை என்றும் கூறவில்லை.

தனியார் பால் விற்பனை விலைக்கும், ஆவின் விற்பனை விலைக்கும் இடையே லிட்டருக்கு ரூ.11 வரை வித்தியாசம் உள்ளது. விலை குறைவு என்பதால் தரமான ஆவின் பாலை வாங்கி, பெயரை மாற்றி தனியார் நிறுவனங்கள் கூடுதல் விலைக்கு விற்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, ஆவின் பால், தனியார் பால் ஆகியவற்றின் விலை சமமாக இருக்க வேண்டும்.

மாநிலம் முழுவதும் ஆவினில் கொள்முதல் செய்யப்படும் சுமார் 21 லட்சம் லிட்டரில் 11 லட்சம் லிட்டர் பால் சென்னையில் உள்ளவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இதில் சுமார் 7 லட்சம் லிட்டர் அட்டைதாரர்களுக்கும், மற்றவை கடைக்காரர்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

அட்டைதாரர்களுக்கு ஒரு லிட்டர் பால் ரூ.24-க்கும், கடைக்காரர்களுக்கு ரூ.27-க்கும் வழங்கப்படுகிறது. இந்தப் பாலையே கடைக்காரர்கள் ரூ.30 வரையிலும் விற்பனை செய்கின்றனர். அதேநேரம், தனியார் பால் பண்ணையாளர்கள் ஒரு

லிட்டர் பாலை ரூ.36 வரையிலும் விற்பனை செய்கின்றனர். ஆவின் பாலை பெறும் அட்டைதாரர்கள் யாரும் ஏழைகளாகவோ, நடுத்தர வர்க்கத்தினராகவோ இல்லை.

தமிழகத்தின் பிற பகுதிகளில் ஓரிரு மாடுகளை வைத்து தினசரி 2 அல்லது 3 லிட்டர் பாலை கறந்து ஆவினுக்கு வழங்கும் ஏழை உற்பத்தியாளர்கள் வறுமையில் வாடிக் கொண்டிருக்க, சென்னையில் உள்ள வசதி படைத்தவர்களுக்கு சேவை மனப்பான்மையுடன் குறைந்த விலைக்கு பாலை விற்கிறது தமிழக அரசு.

அரசின் சேவை மனப்பான்மையை நாங்கள் குறை கூறவில்லை. அதே சேவை மனப்பான்மையுடன் ஆவினுக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு தனது சொந்த நிதியில் இருந்து மானியம் வழங்க அரசு முன்வர வேண்டும். கூட்டுறவு ஒன்றியத்தின் பாலை தனியாரைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்பதால், ஒன்றியத்துக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.300 கோடி வரையிலும் இழப்பு ஏற்படுகிறது. இதை அரசு ஈடுசெய்ய வேண்டும்.

ஆவினில் நிர்வாக அலுவலர், பால் ஆணையர் என்ற இரு பதவியிடங்கள் உள்ளன. ஆனால், கடந்த பல ஆண்டுகளாக இந்த இரு பதவிகளையும் மேலாண் இயக்குநரே கவனித்து வருகிறார். கேள்வி கேட்பவரும், பதில் கொடுப்பவரும் ஒரே நபராக இருப்பதால்தான் ஆவின் நிறுவனம் முன்னேற முடியாமல் நலிவடைந்து வருகிறது. எனவே, இரு பதவிகளுக்கும் தனித்தனியாக ஐ.ஏ.எஸ். நிலையிலான அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.30-ம், எருமைப் பாலுக்கு ரூ.40-ம் வழங்க வலியுறுத்தி வருகிற 28-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் நிர்வாகிகள், பால் உற்பத்தியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர் என்றனர் அவர்கள்.

## வரத்து குறைவால் வாழைத்தார் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி



**கரூர்** மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, என் புகழூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்களை உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியாபாரி களுக்கும் விற்பனை செய் கின்றனர். சில வியாபாரி கள் வாழைத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்துக்கொள் கின்றனர். வாழைத் தோட்டத்தில் விளையும் வாழைத் தார்களை விவசாயி களிடமிருந்து வியாபாரிகள் வாங்கி லாரிகள் மூலம் தமிழ் நாட்டில் உள்ள திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை, நாமக்கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் ரூ.150–க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.200–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200–க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.200–க்கும், மொந்தன் வாழைத்தார் ரூ.400–க்கும் வியாபாரிகள்

வாங்கிச்சென்றனர். நேற்று பூவன் வாழைத்தார் ரூ.300–க் கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.350–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.300–க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.300–க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ.800–க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். வாழைத்தார் வரத்து குறைந்து உள்ளதால் வாழைத்தார் விலை உயர்ந் துள்ளதாக விவசாயிகள் தெரி வித்தனர். வாழைத்தார் விலை உயர்ந்துள்ளதால் வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மழைநீர் சேகரிப்பு திட்டத்தை பொதுமக்கள் முழுமையாக செயல்படுத்த வேண்டும் அமைச்சர் சுந்தர்ராஜன் வேண்டுகோள்**



**பரமக்குடி,**

மழைநீர் சேகரிப்பு திட் டத்தை பொதுமக்கள் முழுமையாக செயல்ப டுத்த வேண்டும் என்று அமைச்சர் சுந்தர்ராஜன் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

மரக்கன்று நடும் விழா

பார்த்திபனூரில் உள்ள மிகப்பழமை வாய்ந்த சிவன் கோவில் தற்போது புனரமைக் கப்பட்டு வருகிறது. மேலும் கோவிலுக்கு அருகில் உள்ள ஊரணி தூர்வாரப்பட்டு வருகிறது. இந்த பணிகளை அமைச்சர் சுந்தர்ராஜன் நேரில் பார்வையிட்டார். அதனை தொடர்ந்து ஊர ணியை சுற்றிலும் 300 மரக்கன் றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அப் போது அவர் பேசியதாவது:- கோவில் ஊரணி ரூ.9 லட் சத்து 76 ஆயிரம் செலவில் தூர்வாரப்பட்டு சுற்றிலும் முள்வேலி அடைக்கப்பட்டுள்

ளது. தற்போது கோவிலுக்கு வரும் பக்தர்கள் பயன்பெறும் வகையில் ஊரணியை சுற்றி லும் 300 மரக்கன்றுகள் நடப் பட்டுள்ளது. ரூ.20 லட்சத் தில் சிவன் கோவிலில் புனர மைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

இதுதவிர பார்த்திபனூரில் ரூ.10 லட்சம் செலவில் உப்பு நீரை நன்னீராக மாற்ற திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. பார்த்திபனூர் அருகே சூடியூ ரில் ரூ.36 லட்சத்தில் திறந்த வெளி கிணறு அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் அப்ப குதியில் உள்ளவர்களின் குடிநீர் பிரச்சினை தீரும். தமிழகத்தில் மழைநீர் சேக ரிப்பு திட்டம் முறையாக செயல்பட்டு வருகிறது. அதனை மக்கள் முழுமையாக செயல்படுத்த வேண்டும். மழை நீர் சேகரிக்கும் விதமாக குளங்கள், ஊரணிகள் தூர்வா ரப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆண்டுகளில் மட் டும் தமிழகத்தில் ரூ.1 கோடியே 95 லட்சம் செலவில் விவசா யிகளுக்கு பயனளிக்கும் கசிவு நீர் குட்டைகள் ஊராட்சிகள் தோறும் வெட்டப்பட்டுள் ளது. பார்த்திபனூர் சிவன் கோவிலுக்கு பஸ் நிலையத் தில் இருந்து பொதுமக்கள் எளிதில் வந்து செல்லும் வகை யில் தார்ச்சாலை விரைவில் அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் முனிய சாமி, மாவட்ட கவுன்சிலர்கள் ஆனிமுத்து, ரஜினி, ஒன்றிய செயலாளர் முத்தையா, ஊராட்சி தலைவர் ரேணுகா தேவி தங்கவேல், வருவாய் கோட்டாட்சியர் வசந்தி, எம்.ஜி.ஆர். மன்ற ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணி யன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் நகர் செயலாளர் நாச்சியப்பன் நன்றி கூறினார்.

**காணை பகுதிகளில் குறுவை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



**காணை**, பகுதிகளில் குறுவை சாகுபடியில் நெல் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தொடர் மழை

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக பொதுமக்களை வெயில் வாட்டி வந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையின் காரணமாக வெயில் ஓரளவு குறைந்து, விவசாய கிணறுகளில் நீர்மட்டம் ஓரளவு உயர்ந் துள்ளது. இந்நிலையில் இதனை பயன்படுத்தி காணை, பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் குறுவை சாகுபடியில் நெல் நடவு பணிகளை தொடங்கி யுள்ளனர்.

குறுவை சாகுபடி

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், சென்ற முறை சம்பா பயிர் சாகுபடியில் மழையின்மை காரணமாக குறிப்பிட்ட அளவு லாபம் கிடைக்கவில்லை. இந்நிலை யில் தற்போது மழைக்காலம் தொடங்கியிருப்பதால், தொடர்ந்து மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் குறுவை சாகுபடியை தொடங்கியுள் ளோம். கடந்த முறை குறுவை சாகுபடியின்போது 100 கிலோ எடை கொண்ட மூட்டை ஒன்று ரூ.1200-க்கு விற்பனை யானது. தற்போது நெல் விதையின் விலை அதிகமாகி விட்டது. இருந்தபோதும் நெல்லின் விலை குறைவாகவே உள்ளது. தேசிய ஊரக வேலை

திட்டத்தில் பணி செய்வதற் காக கிராம மக்கள் சென்று விடுவதால் ஆள் பற்றாக்குறை என்பது மிகுந்து காணப்படு கின்றது. ஒரு நாளைக்கு கூலியாக ரூ.200 பணியாளர் களுக்கு கொடுக்க வேண்டியுள் ளது. இதனால் தற்போது பெரும்பாலும் எந்திரங்கள் மூலம் நடவு செய்து வருகின் றோம். மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பிலும், நெல்லின் விலையில் முன்னேற்றம் காணப்படும் என்ற வகையிலும் சம்பா நடவு பணிகளை ஆர்வமுடன் தொடங்கி யுள்ளோம் என்றார்.

**<u>கூட்டுறவு சங்க ரேஷன் கடைகளில் வெங்காயம் விற்பனை</u>**



வெங்காயத்தின் விலையை ஒரு கட்டுக்குள் கொண்டு வரவும், குறைந்த விலையில் கிடைக்கவும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் ரேஷன் கடைகளில் வெங்காயம் விற்பனை செய்யப்படுகிறது. திருச்சி அரசு அலுவலர் கூட்டுறவு பண்டகசாலையால் நடத்தப்படும் பீமநகர் ரேஷன் கடையில் பெரிய வெங்காயம் விற்பனையை சங்க தலைவர் ஆறுமுகம் தொடங்கி வைத்தார். துணை தலைவர் திருஞானம் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். திருச்சி கூட்டுறவு விற்பனை சங்கத்தால் நடத்தப்படும் பாண்டமங்கலம் ரேஷன் கடையில் திருச்சி கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவர் சேசுமலைக்கனி, வெங்காய விற்பனையை தொடங்கி வைத்தார். மேலாளர் ராணி, விற்பனையாளர் சந்திரா மற்றும் வீரன் ஆகியோர் பொதுமக்களுக்கு சின்ன வெங்காயத்தை கிலோ ரூ.20–க்கு வழங்கினர். குறைந்த விலைக்கு சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

**<u>விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்க வேளாண்மை விரிவாக்க மையங்கள் விடுமுறை நாட்களிலும் செயல்படும் அதிகாரி தகவல்</u>**




**மன்னார்குடி,**

விவசாயிகளுக்கு மானி யங்கள் வழங்க வசதியாக வேளாண்மை விரிவாக்க மையங்கள் விடுமுறை நாட்களிலும் செயல்படும் என்று வேளாண்மை துறை கூடுதல் இயக்குனர் ராஜேந்திரன் கூறினார்.

<u>மானியங்கள் வழங்கும் விழா</u>

தமிழக அரசின் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட் டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் வேளாண்மை இடுபொருட் கள், தண்ணீர் குழாய்கள் வழங்கும் விழா திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட் டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது.

இதில் ஜிப்சம், சிங்சல்பேட், உயிர்உரம், திரவ உயிர்உரம், நெல் நுண்ணூட்டம் ஆகிய வேளாண்மை இடுபொருட் களும், வயல்களுக்கு தண்ணீர் இறைப்பதற்கான குழாய்களும் மானியங்களாக வழங்கப் பட்டன. விழாவில் வேளாண்மை துறை கூடுதல் இயக்குனர் ராஜேந்திரன் கலந்து கொண்டு விவசாயி களுக்கு மானியங்களை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறிய தாவது:-

<u>விடுமுறை நாட்களில் செயல்படும்</u>

அரசு செயல்படுத்தி உள்ள குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியங்களை அனைத்து விவசாயிகளும் சாகுபடி காலம் முடிவடை வதற்குள் பெறுவதற்கு வசதி யாக அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களும் விடு முறை நாட்களிலும் செயல் படும். இதை விவசாயிகள் பயன் படுத்திக் கொள்ள வேண் டும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

விழாவில் திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மயில் வாகணன், துணை இயக்குனர் நடேசன், உதவி இயக்குனர்கள் பாலசுப்பிரமணியன், உத்திரா பதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**நீடாமங்கலம் அருகே பாமணி ஆற்றில் மணல் திட்டு நாணல் செடிகளை அகற்ற வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்**

**நீடாமங்கலம்**, : நீடாமங்கலம் அருகே பாமணி ஆற்றில் உள்ள மணல் திட்டுகள், காட்டாமணி செடி களை அகற்ற வேண்டும் என விவசாயி கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க நீடாமங்கலம் ஒன்றிய தலைவர் பூசாந்திரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கல்லணையிலிருந்து பிரிந்து பெரிய வெண்ணாறு நீடாமங்கலம் அருகே வந்து கோரையாறு தலைப்பு என பாமணியாறு, கோரையாறு, சிறிய வெண்ணாறு என மூன்று ஆறுகள் பிரிந்து திருவாரூர், நாகை மாவட்ட விவசாயத்திற்கு பயன்படுகிறது. இதில் விவசாயத்திற்கு பாமணியாற்றிலிருந்து 14,615 எக்டேரும், கோரையாற்றிலிருந்து 48,770 எக்டேரும், சிறிய வெண்ணாறு மூலம் 37,531 எக்டேரும் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. இந்த ஆறுகளில் பாமணியாற்றில் சித்தமல்லி,

பரப்பனாமேடு, சம்பாவெளி, ராஜப்பையன்சாவடி, சீதாராமன் சாவடி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும், கோரையாற்றில் ஒரத்தூர், கொத்தமங்கலம், பெரம்பூர், கண்ணம்பாடி, காரிச்சாங்குடி, மேலாளவந்தச்சேரி, தண்டாலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும், சிறிய வெண்ணாற்றில் நடுப்படுகை, பாப்பையன் தோப்பு, அனுமந்தபுரம், பழங்களத்தூர், பத்தூர் மேல்கரை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் ஆறுகளின் நடுவில் மணல் திட்டுகள், நாணல் திட்டுகள், சீமை காட்டாமணி திட்டுகள் அதிக அளவில் உள்ளது. தற்போது பருவமழை பொய்த்த நிலையில் மேட்டூர் அணையின் நீர் வரத்து குறைவாக உள்ளது. இதனால் ஆற்று நீரை நம்பி சாகுபடி செய்யும் விவசாயிகள் குறுவை சாகுபடி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். மேட்டூர் அணை நிரம்பி சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் திறக்கும் நிலை ஏற்பட்டால் ஆறுகளில் உள்ள மணல் திட்டுகளால் பாதிப்பு அதிகம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இதனால் முழுமையான விவசாயம் செய்ய முடியாது. எனவே சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுகளில் ஏற்பட்டுள்ள மணல் திட்டுகளை அகற்றியும், ஆறுகளின் நடுவில் முளைத்துள்ள நாணல் மற்றும் சீமை காட்டாமணிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வலங்கைமானில் குறுவை தொகுப்பு திட்ட இடுபொருள் வழங்கும் விழா திருவாரூருக்கு ரூ.**10**கோடி ஒதுக்கீடு**:** அமைச்சர் தகவல்

வலங்கைமான்,:வலங்கைமானில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்ட இடுபொருட்கள் வழங்கும் விழாவை அமைச்சர் காமராஜ் தொடங்கி வைத்தார். அப்போது திருவாரூர் மாவட்டத்திற்கு குறுவை தொகுப்பு திட்டத்திற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமானில் நடப்பு நிதியாண்டிற்கான குறுவை தொகுப்பு திட்ட இடுபொருள் வழங்கும் துவக்க விழா நடைபெற்றது. கலெக்டர் மதிவாணன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் மயில்வாகனன் வரவேற்று பேசினார். வேளாண்மை கூடுதல் இயக்குநர் ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மணிமாறன், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன்

ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி துவக்கி வைத்து உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பேசும்போது, நடப்பு நிதியாண்டில் 50 விவசாய குழுக்களுக்கு ரூ. ஒரு கோடி ஒதுக்கீட்டில் நெல் நடவு இயந்திரமும், ரூ.15 லட்சம் ஒதுக்கீட்டில் 50 களை எடுக்கும் இயந்திரமும், ரூ.4.20 லட்சம் ஒதுக்கீட்டில் பிவிசி குழாய்களும், 170 ஹெக்டேர் பரப்பில் சமுதாய நாற்றங்கால் அமைப்பதற்கு ரூ.1கோடியே 6லட்சத்து 25ஆயிரமும், 14 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிற்கு ரூ. 1கோடியே 22 லட்சத்து 5லட்சமும், ரூ.50.75 லட்சம் ஒதுக்கீட்டில் நுண் சத்தும், 6800 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.1கோடியே 19 லட்சம் ஒதுக்கீட்டில் ஜிப்சமும், 4800 ஹெக்டேர் பரப்பிற்கு உயிர் உரங்களுக்கு ரூ.6 லட்சமும், திரவ உயிர் உரங்களுக்கு ரூ.28.8 லட்சம் என மொத்தம் ரூ.9கோடியே 68 லட்சத்து மூவாயிரம் மதிப்பில் திருவாரூர் மாவட்டத்திற்கு மட்டும் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். விழாவில் மானிய விலையில் நடவு இயந்திரங்கள், நுண்ணூட்ட உரங்கள், நாற்றுகள் ஆகியவற்றை அமைச்சர் வழங்கினார்.

விழாவில், வேளாண் இணை இயக்குநர் தேவேந்திரன், ஆர்டிஓ பரமசிவம், வேளாண் அலுவலர் பிரபு, ஒன்றியக்குழு தலைவர் பரமேஸ்வரி, துணைத் தலைவர் குருமூர்த்தி, பேரூராட்சி தலைவர் ஜெயபால் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**ஆடிப்பட்ட பருவத்தில் நிலக்கடலை பயிரிடலாம் வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை**

**காரைக்குடி**, : ஆடிப்பட்ட பருவத்தில் நிலக்கடலை பயிரிடலாம் என செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வேளாண்ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கண்ணன், சுவாமிநாதன், பரமசிவன் மற்றும் கதிர்வேலன் ஆகியோர் கூறியது:

சிவகங்கை மாவட்டத்தில் 5,038 எக்டேர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 75 சதவீதம் மானாவாரியில் சாகுபடி செய்யப்படுகிறது.

இம் மாவட்டத்தை பொறுத்தவரை சிங்கம்புணரி, திருப்பத்தூர், காளையார்கோவில், கல்லல் மற்றும் எஸ்.புதூர் ஒன்றியங்களில் கை விதைப்பு மூலம் பயிரிடப்படுகிறது. முன் ஆடிப்பட்டம் (ஜூன், ஜூலை) மற்றும் பின்ஆடிப்பட்டம் ( ஜூலை, ஆகஸ்ட்) பருவத்தில் நிலக்கடலை பயிரிடலாம்.

மானாவாரியில் உயர் விளைச்சல் ரகங்களை தேர்ந்தெடுக்கும் போது வறட்சியை தாங்கும் தன்மை, பூச்சி மற்றும் நோய்களை ஓரளவு தாங்கி வளரக்கூடிய தன்மை உடைய ரகங்களான டிஎம்வி 7, டிஎம்வி 13, விஆர்ஐ 2 ஆகியவற்றை பயிரிடலாம். நிலக்கடலைக்கு வரிசைக்கு வரிசை 30 செ.மீ , செடிக்கு செடி 10 செமீ இடைவெளி விடவேண்டும். செம்மண் மற்றும் செம்புறை நிலங்களில் விதைப்புக் கருவி கொண்டு விதைக்கும் போது விதையின் அளவு குறைவதுடன் மண்ணில் ஈரம் குறைவதற்குள் நாள் ஒன்றுக்கு 4 ஏக்கர் வரை விதைக்கலாம்.

விதைப்பதற்கு முன்பு விதைநேர்த்தி செய்ய வேண்டும். ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் மற்றும் டிரைகோடெர்மா 4 கிராம் விதைநேர்த்தி செய்ய பயன்படுத்த வேண்டும். ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா 1 பாக்கெட் வீதம் வடிநீரில் கலந்து காற்றில் உலர வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் விதை முளைப்புத்திறன் அதிகரிகப்படுவதுடன் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் அதிகரிக்கும். மானாவாரி நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுதல் அவசியம். ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சத்தை 80 கிலோ அடியுரமாகவும் மீதமுள்ள 80 கிலோ விதைத்த 35 முதல் 45 நாட்களுக்குள் மழை வரும் போது மேலுரமாக இட்டால் எக்டேருக்கு 305 கிலோ மகசூல் அதிகமாக பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

**<u>வேளாண் உயர்மட்டக் குழுவை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் விவசாயிகள் மாநாட்டில் தீர்மானம்</u>**

**திருவண்ணாமலை,**: திருவண்ணாமலை அபிராமி திருமண மண்டபத்தில் இந்திய உழவர் உழைப்பாளர்கட்சி சார்பில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமிநாயுடு படத்திறப்பு விழா, தியாகிகள் தினம், விவசாயிகள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு மாநில தலைவர் வேட்டவலம் கே.மணிகண்டன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞர் அணி செயலாளர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி,

பி.கருணாகரன், கே.இ.வரதராஜுலு, ஜி.கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் என்.பி.வெங்கடகிருஷ்ணன் வரவேற்று பேசினார்.

மாநாட்டில் தமிழக குடிசை மாற்று வாரிய தலைவர் கு.தங்கமுத்து, மற்றும் மாநில பொதுச்செயலாளர் பி.என்.ராஜகோபால், தண்டராம்பட்டு நிலவள வங்கி தலைவர் எஸ்.ஆர்.தர்மலிங்கம் உள்பட பலர் பேசினர்.

இதில் விவசாயிகள், அதிகாரிகள் அடங்கிய வேளாண் உயர்மட்டக்குழுவை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.